Telephone – 0413 2200115
E-mail Id : sreo-cgc.py@gov.in

**Government of India**
Ministry of Labour & Employment - DGE
**NATIONAL CAREER SERVICE CENTRE FOR SC/ST**
Plot No.5, 2nd Floor Pondy-Villupuram Main Road
(Above Canara Bank, Reddyarpalayam Branch)
Puducherry - 605010

National Career Service
सही अवसर, सही समय
Right Opportunities, Right Time

No: NCSC P/A-33022/1/2-21/Adm/ 533 Date: 24th November 2021

# பத்திரிகை வெளியீடு

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தை சேர்ந்த படித்து தகுதியான கல்வித் தகுதியுடன் அரசு வேலை தேடும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் நபர்களுக்கு போட்டித் தேர்வுக்கு தயார்படுத்துதல் விதமாக போட்டித்தேர்விற்கு பயிற்சி அளித்தல் கணினி மற்றும் சுருக்கெழுத்து திறன் பயிற்சி போன்றவற்றை இலவசமாக 11 மாதகால சிறப்புப் பயிற்சித் திட்டம் வழங்குதல்.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்கான தேசிய வாழ்வாதார சேவை மையமானது இந்திய அரசு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் - DGE, ஆல் புதுச்சேரியில் நிறுவப்பட்டு, படித்த வேலையற்ற SC/ST சமூகத்தை சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்பு தொழில் வழிகாட்டுதல்/ தன்னம்பிக்கை ஏற்படுத்துதல் மற்றும் போட்டித்தேர்வு பயிற்சிகளை அளித்து வருகிறது. புதுச்சேரியில் முதன்முறையாக 11 மாத கால அரசு வேலை வாய்ப்பு பெறுவதற்கான போட்டித்தேர்வு பயிற்சி, கணினிப்பயிற்சி சுருக்கெழுத்து பயிற்சி ஆகியவை இலவசமாக திறன்வாய்ந்த தனியார் பயிற்சி நிறுவனம் மூலம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியை சேர்ந்த நபர்களுக்கு 01 டிசம்பர் 2021 முதல் ஆரம்பமாக உள்ளது. பயிற்சி காலத்தில் உதவித்தொகை ரூ 1000/-,வழங்கப்படும் மற்றும் இலவசமாக போட்டி தேர்வு பயிற்சி புத்தகங்கள் மற்றும் எழுது பொருள்களும் வழங்கப்படும். இந்த பயிற்சியில் சேர்ந்து பயனடைய விருப்பமுள்ள புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியை சேர்ந்தவர்கள் தங்களுடைய விருப்பமனுவை கல்வி மற்றும் குடும்பம் பற்றிய சுய விபரங்களுடன் துணை பிராந்திய வேலைவாய்ப்பு அதிகாரி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்கான தேசிய வாழ்வாதார சேவை மையம், இரண்டாம் தளம், கனரா பேங்க், ரெட்டியார்பாளையம், புதுச்சேரி என்ற முகவரிக்கு 29 நவம்பர் 2021 க்குள் விண்ணப்பிக்க வேண்டுகிறோம். இந்த பயிற்சி புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அமைந்துள்ள தலைசிறந்த போட்டிப்பயிற்சி நிறுவனத்தின் மூலம் நடைபெறவுள்ளது. இந்த பயிற்சில் சேர விருப்பம் உள்ளவர்கள் HSC (10+2) மற்றும் அதற்கு மேல் படித்து 27 வயதுக்குள் இருக்கவேண்டும்.

24/11/21

Sub- Regional Employment Officer
NCSC for SC/ST, Puducherry